நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.M.P. No. 1934/2024

**புகார்தாரரின் சத்தியபிரமாணம் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோகனசுந்தரம் |
| தந்தை / கணவர் பெயர் | : | வெங்கடேசன் |
| கிராமம் | : | சின்னசோரகை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **புகார்தாரரின் சத்தியபிரமாணம் வாக்குமூலம்** |
| வயது | : | 34 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 06–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**சத்தியபிரமாண வாக்குமூலம்** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.30 PM)

1. என்னுடைய பெயர் V. மோகனசுந்தரம். சோரகைமலை வேட்ராய பெருமாள் கோவிலில் பூசாரியாக வேலை செய்கிறேன். இந்த வழக்கின் எதிரி K. வரதராஜன் எனது தங்கை மரகதம் என்பவரின் கணவர் ஆவார்.

2. எனது தங்கை மரகதத்திற்கும் எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு எனது தங்கை எதிரியிடம் இருந்து பிரிந்து தனது குழந்தையுடன் 5 வருடமாக தனியாக

எங்களது வீட்டில் தான் வசித்து வருகிறார். மேற்படி எனது தங்கைக்காக எதிரியிடம் நியாயம் கேட்டதால் என்மீது பகைக்கொண்டு என்மீது அவதூறு பரப்ப ஆரம்பித்தார்.

3. என்னுடைய பெயரில் முகநூல் பக்கம் தொடங்கி நான் மதுகுடிப்பதாகவும், கஞ்சா பயன்படுத்துவதாகவும் பதிவிட்டு எனது பெயருக்கு கலங்கம் விளைவித்துள்ளார். அதுதொடர்பான முகநூல் பதிவுகளின் ஸ்கிரீன்சாட்டுகளை எடுத்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஸ்கிரீன்சாட்டுகளை எடுக்க பயன்படுத்திய செல்போன் தற்போது என்னுடைய வசம் தான் உள்ளது. அசல் முகநூல் பதிவுகளை எதிரி நீக்கிவிட்டார்.

4. நான் பெண் பார்க்க செல்லும் இடத்திற்கெல்லாம் சென்றும், போன்மூலம் தொடர்பு கொண்டு நான் மதுகுடிப்பதாகவும், கஞ்சா பயன்படுத்துவதாகவும் என்னை பற்றி தவறான அவதூறுகளை ஏற்படுத்தி எனக்கு திருமணம் நடைபெறவிடாமல் பிரச்சனை செய்து வருகிறார். மேற்படி புகைப்படங்கள் நான் எனது முகநூல் பக்கங்களில் பதிவேற்றியதை வைத்தும், என் தங்கைக்கு திருமணம் ஆன புதிதில் நான் அவர்கள் வீட்டுக்கு சென்றிருந்தபோது எடுத்த புகைப்படங்களை வைத்தும் தவறாக சித்தரித்து என்மீது முகநூலிலும், என் உறவினர்கள் மத்தியிலும் அவதூறு பரப்பி வருகிறார்.

5. மேலும் நான் வேலை செய்து வந்த கோனூர் சென்றாய பெருமாள் கோவிலில் என்னை பற்றி தவறான செய்திகளை என்னை வேலையிலிருந்து நீக்கும்படியாக செய்துவிட்டார். இந்த பிரச்சனை தொடர்பாக நங்கவள்ளி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம்இந்த பிரச்சனை தொடர்பாக புகார் கொடுத்தேன். அவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே என்மீது அவதூறு பரப்பும் எதிரிக்கு எதிராக இந்த வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–05.45 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்

நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.